பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திருமதி.க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள்

செ.மு.ந.க.எண்: 281/ அ1/ 2024 நாள்: .03.2024

**பொருள்:** சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை பெரம்பலூர் மாவட்டம் - பணியடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 - புகார் மனுக்களைப் பெறுவதற்கு தாலுகா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனைய அலுவலர்கள் (Nodal Officers) நியமித்து ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. பணியிடத்தில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு , தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013.
2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் நே.மு.ந.க.எண்.58645/WW2 (3) / 2013, நாள்: 29.10.2019.
3. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின்நா.க.எண்.3325/SRCW/2024, நாள்:07.03.2024

**ஆணை:**

பார்வை-1 ல் காணும் சட்டத்தின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட அளவில் உள்ளூர்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புகார் மனுக்களைப் பெறுவதற்கு தாலுகா அளவில் வட்டாட்சியர்களையும், கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும் ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மைய முனைய அலுவலர்களாக (Nodal Officers) கீழ்கண்டவாறு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சி | நகராட்சி ஆணையர், பெரம்பலூர் |
| 2 | பெரம்பலூர் வட்டாரம் | வட்டாட்சியர், பெரம்பலூர் |
| 3 | குன்னம் வட்டாரம் | வட்டாட்சியர், குன்னம் |
| 4 | ஆலத்தூர் வட்டாரம் | வட்டாட்சியர், ஆலத்தூர் |
| 5 | வேப்பந்தட்டை வட்டாரம் | வட்டாட்சியர், வேப்பந்தட்டை |
| 6 | பெரம்பலூர் கோட்டம் | கோட்டாட்சியர், பெரம்பலூர் |
| 7 | பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், பெரம்பலூர் |
| 8 | குன்னம் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், குன்னம் |
| 9 | ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், ஆலத்தூர் |
| 10 | வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர், வேப்பந்தட்டை |

13/3/2024

மாவட்ட ஆட்சித்தலைவர்,

பெரம்பலூர்.

13/3/24

DSWO